# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 09.01.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இன்றைய குத்பாவின் தலைப்பை நான் தொடங்குவதற்கு முன், கடந்த குத்பாவின் தொடர்ச்சியாக சில விஷயங்களை கூற விரும்புகின்றேன். ஸலவாத் ஓதுவது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உயர் தகுதியை நான் கூறினேன். அதை பெரும்பாலானவர்கள் புரிந்திருப்பீர்கள். எனவே, சிலர் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தினருள் ஒருவராவார்கள். ஏனென்றால், ஹதீஸ்களில் மஸீஹ் மற்றும் மஹ்தியின் உயர் அந்தஸ்து மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கொள்கின்ற அன்பு மட்டுமின்றி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேசமும் வெளிப்படுகிறது. இந்த கேள்வியை எழுப்புபரின் சிந்தனை மிகவும் சரியாகும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த ஆன்மீக மகனைப் பற்றிய செய்திகள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சொற்களாலேயே ஹதீஸ்களிலிருந்து நமக்கு கிடைக்கிறது.

(கடந்த வாரம்) நான் முஹர்ரம் தொடர்பாக கூறினேன். எனவே, ஷியா மற்றும் சுன்னி மக்களின் கொள்கைகளோடு எனது உரை சுருக்கமாக இருந்தது. நாம் முஸ்லிம் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் புரிந்து கொண்டால், மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்று கவனத்திலிருந்தால் அதாவது எவரது நாவினாலும் கையினாலும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருப்பாரோ அவரே முஸ்லிம் ஆவார். பிறகு ஒருவருக்கெதிராக ஒருவர் மனதிலுள்ள பொறாமை, காழ்ப்புணர்ச்சி அகன்று விடும். ஒருவருடைய உயிருக்கு பாதுகாப்பு மற்றும் ஒரு முஸ்லிமின் அடையாளம் தொடர்பாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

**மன் கால லாயிலாஹ இல்லல்லாஹு வ கஃபர பிமா யுபது மின் தூனில்லாஹி ஹரும மாலுஹு வ தமுஹு வ ஹிஸாபுஹு அலல்லாஹ் - எவர் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று கூறி அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுபவற்றை விட்டு விலகி இருப்பாரோ அவருடைய உயிர் மற்றும் உடைமை கண்ணியத்திற்குரியதாகி விடுகிறது. பிறகு அவருடைய கணக்கு வழக்கு அல்லாஹ்வைச் சேர்ந்ததாகும்.**

இது, இஸ்லாத்தில் ஒருவருடைய உயிரை பாதுகாப்பது தொடர்பான போதனையாகும். மேலும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று முஸ்லிம்களுக்கு அஞ்சி கூறினாலும் சரி இதற்குப் பிறகும் அவரை கொலை செய்தால் அவருடைய நிலைக்கு நீங்கள் ஆகி விடுவீர்கள். உங்களது நிலைக்கு அவர் வந்து விடுகிறார்.

இதுவே ஒரு முஸ்லிமின் உயிரைப் பாதுகாப்பதற்காக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாகும். கலிமாவின் முக்கியத்துவத்தைப் பற்றிய சரியான உணர்வு முஸ்லிம்களுக்கு வந்து விட்டால் இன்றைய நாட்களில் ஏற்படுகின்ற விரும்பத்தகாத செயல்கள் குறிப்பாக முஹர்ரம் மாதத்தில் ஏற்படுகின்ற குழப்பங்கள் ஒருபோதும் ஏற்படாது.

ஆனால், இந்த விஷயத்தைப் புரியாதது முஸ்லிம்களின் துரதிஷ்டமாகும். மேலும் கடந்த நாட்களில் செய்தித்தாள்களில் வெளிவந்த செய்திகள் மூலம் முஹர்ரம் தொடர்பாக நான் முஸ்லிம்களின் நிலையை (சென்ற குத்பாவில்) கூறியது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது ஷியா மற்றும் சுன்னி அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்கின்றனர். முஹர்ரம் மாதத்தில் இந்நாட்களில் குறிப்பாக நான் கூறிய இவ்விஷயங்கள் சரியாக நிரூபணமாகியுள்ளது.

இவை காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாதவர்களின் எண்ணங்களாகும். மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த ஆன்மீக புதல்வனை இவர்கள் மறுத்துள்ளனர். அன்னார் தொடர்பாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) தோன்றும்போது பனிமலைகளில் தவழ்ந்து சென்றாவது அவருக்கு எனது ஸலாமை தெரிவியுங்கள் என்ற கூறினார்கள். எனவே, இது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதியாகும். இது மட்டுமின்றி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வரவிருந்த மஸீஹ் மீது இருந்த அளப்பெரும் அன்பு வெளிப்படுகின்ற இன்னும் பல ஹதீஸ்கள் உள்ளன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த நெருக்கம் எல்லாவற்றையும் விட மிக உயர்ந்ததாகும்.

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கண்ட ஆன்மீகக் காட்சியை (ருஃயா) குறிப்பிட்டேன். அதாவது ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹரா (ரலி) அவர்கள் அன்னாருடைய தலையை தங்களது மடி மீது ஒரு அன்பான தாயைப் போன்று வைத்துக் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது அன்பான மக்களின் குடும்பத்தார் அனைவரும் அங்கு இருந்தனர். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தில் ஒருவர் ஆவார்கள் என்பதைக் குறிக்கிறது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் (நுபித்துவ) வாதம் செய்வதற்கு முன் ஒருமுறை மிகவும் நோயுற்றபோது இல்ஹாம் மூலம் துஆ கற்றுக் கொடுக்கப்பட்டது. அதில் ஸலவாத்தும் அடங்கும். மேலும் ஷிஃபாவிற்கு இதை ஓதுமாறு கட்டளையிடப்பட்டது. அந்த துஆ இதுவாகும்.

**சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அழீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ ஆலி முஹம்மத்.**

இந்த இல்ஹாமில் **அலா** என்ற இணைப்புச் சொல் இல்லாமல் **ஆலி முஹம்மத்** என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பதவியை, தகுதியை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நெருக்கமாக வைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆன்மீக குடும்பத்தில் ஒருவர் ஆவார்கள். பிறர் இதை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நேரடியாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தில் ஒருவர் ஆவார்கள் என்பது நமது கொள்கையாகும்.

இந்த உயர் பதவி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்ட நேசத்தின் காரணமாக கிடைத்தது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த உயர் தகுதியை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதியதன் காரணமாகவே பெற்றார்கள்.

எனவே, இதன் மூலமாகவும் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு பொறுப்பு உள்ளது. அதாவது இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம்கள் மத்தியில் பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் காணப்படுகிறது. இந்த நிலையைக் கண்டு அதிகமாக ஸலவாத் ஓதுங்கள். அதிகமாக ஸலவாத் ஓதுங்கள். ஏனென்றால், நாம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தில் ஒருவராக அல்லாஹ்வே இணைத்துள்ள ஒருவரை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

முஸ்லிம்களிடம் காணப்படும் சுயநலப்போக்கை நாம் இன்றைய நாட்களில் கண்கூடாகப் பார்க்கிறோம். பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் பொழிகின்ற அநியாயமான குண்டு மழையின்போதும் ஒட்டுமொத்த முஸ்லிம் நாடுகள் ஒன்றிணைந்து குரல் எழுப்பவில்லை. தனித்தனியே ஒவ்வொரு குரலும் எழுப்பப்படுகிறது. அதுவும் மிருதுவான முறையில் எழுப்பப்படுகிறது. மிக மெல்லிய குரல் எழுப்பப்படுகிறது. இதற்கு எதிராக மேற்கில் சில கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட முறையிலும் அமைப்பு ரீதியாகவும் மிக கடினமான

எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளார்கள். பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் புரிகின்ற அநியாயப் போரை முஸ்லிம் நாடுகளை விட கடுமையான முறையில் இவர்கள் எதிர்க்கிறார்கள். எனவே பொதுவான இந்த முஸ்லிம் சமுதாயம் உணர்வற்று காணப்படுகிறது. இப்போது ஸலவாத் மற்றும் துஆவைக் கொண்டு முஸ்லிம்களுக்கு உதவி செய்வதே நமது பணியாகும். மீண்டும் நான் கூறுகிறேன் துஆவின் மீது மிக அதிகமாக கவனம் செலுத்துங்கள். ஏனென்றால், நாம் முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டுள்ளோம். எனவே நமது மாபெரும் ஆயுதம் துஆவேயாகும். இதைக் கொண்டுதான் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் வெற்றி பெறும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இப்போது நான் எனது குத்பாவின் இரண்டாவது பகுதிக்கு வருகிறேன். பொதுவாக ஜனவரியின் முதல் வாரம் வக்ஃபே ஜதீதின் புதிய வருடம் அறிவிக்கப்படும் என்பதை அனைவரும் அறிவீர்கள். மேலும் கடந்த வருடத்தின் பொருள் தியாகம் தொடர்பாகவும் சுருக்கமாக கூறப்படுகிறது. இது தொடர்பாக நான் கூறுவேன். ஆனால் இதை கூறுவதற்கு முன் இது தொடர்பாக ஒரு மூஃமினுடைய பொறுப்பு என்ன? எவ்வாறு தியாகங்கள் செய்ய வேண்டும்? **இன்ஃபாக் ஃபீ ஸபீலில்லாஹ்** – அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தல் என்றால் என்ன? இது தொடர்பாக நமது செயல்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பது பற்றி சிலவற்றை எடுத்துரைக்கிறேன்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் சூரா ஹதீதில் கூறுகிறான்.

**இன்னல் முஸத்திகீன வல் முஸத்திகாத்தி வஅக்ரளுல்லாஹ கர்ளன் ஹஸனய்யுளாஅஃபு லஹூம் வலஹூம் அஜ்ருன் கரீம் – தருமம் வழங்கும் ஆண்கள், தருமம் வழங்கும் பெண்கள், அல்லாஹ்வுக்கு அழகிய கடனாக கடன் கொடுப்பவர்கள் ஆகியோருக்கு அது பன்மடங்கு ஆக்கப்படும். அவர்களுக்கு கண்ணியமான கூலியும் உண்டு. (57:19)**

இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். இறைவனுக்கு உங்கள் பைசாவின் தேவை இல்லை. நீங்கள் இறைவழியில் செலவு செய்தால் அல்லாஹ் அதனை அழகிய கடன் என்று கருதி திருப்பிக் கொடுப்பான். இது தனது நல்லடியார்கள் மீது அல்லாஹ்வின் நேசத்தின் வெளிப்பாடாகும். அவன் தன்னிறைவு பெற்றவன் ஆவான். மேலும் அவனுக்கு மனிதனுடைய ரூபாய் தேவையில்லை. ஆனால், அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்பவரைப் பார்த்து அல்லாஹ் கூறுகிறான். இது என் மீது கடனாகும். மேலும் நானே இதை திருப்பிக் கொடுப்பேன். கடனை வாங்கி விட்டு அதை திருப்பிக் கொடுக்க மறந்து விடுபவர்கள் போன்று அல்ல. மாறாக, அல்லாஹ் கூறுகிறான். நான் இதை நிச்சயமாக திருப்பிக் கொடுப்பேன்.

எனவே, எவ்வகையான பொருள் தியாகமாக இருந்தாலும் சரி அல்லாஹ் அதை மதிக்கிறான். குறிப்பாக இன்றைய நாட்களில் மார்க்கத்தை பரப்புவதற்காக பொருள் தியாகம் செய்யப்படுகிறதென்றால் அது அல்லாஹ்வின் பார்வையில் எவ்வளவு மதிப்பிற்குரியது என்பதை மனிதனால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. மனித அறிவு அதை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. அது முழுமையாக அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக செய்யப்படும் பொருள் தியாகமாக இருக்க வேண்டும் என்பதுதான் நிபந்தனையாகும். மேலும் உலக மக்கள் பௌதீக மோகத்திலும் மனயிச்சைகளை பூர்த்தி செய்வதிலும் மூழ்கியுள்ள இந்த நிலையில் தியாகம் செய்பவர்கள், நிச்சயமாக அல்லாஹ்வின் பாதையில் பொருள் தியாகம் செய்து அல்லாஹ்வின் புறமிருந்து மிகச்சிறந்த முறையில் அந்த கடனை வசூல் செய்பவர்கள் ஆவர். இது வெறும் பழைய கட்டுக்கதைகள்தான். இதை நாம் திருக்குர்ஆனிலிருந்து படிக்கத்தான் செய்கிறோம். அனுபவம் ஏதும் இல்லை என்றோ பழைய காலத்தில்தான் இந்த சம்பவங்களெல்லாம் நடந்தன என்றோ கூற முடியாது. மாறாக, இந்தக் காலத்திலும் நம்மில் பலர் இந்த விஷயங்களை கண்கூடாகப் பார்த்து வந்துள்ளோம். இப்போதும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இதுவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்த ஒரு அஹ்மதிக்கு கிடைத்திருக்கும் எண்ணற்ற அருட்கொடைகளில் ஒரு அருட்கொடையாகும். இதற்காக அஹ்மதிகள் அல்லாஹ்விற்கு எவ்வளவுதான் நன்றி கூறினாலும் அது

குறைவு தான். மேலும் ஒவ்வொரு வருடமும் சூழ்நிலை சரியில்லாத போதிலும் அஹ்மதியின் பொருள் தியாகத்தின் உதாரணங்கள் பிரகாசமாகிக் கொண்டே செல்கிறது. இவ்வருடம் முழு உலகிலும் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டது. எனினும் பொருள் தியாகத்தில் அஹ்மதிகள் பின்வாங்கவில்லை. நான் எவ்வாறு காலம் கழிப்பேன்? என்று ஒரு அஹ்மதி ஒருபோதும் கவலையடையவில்லை. ஒரு அஹ்மதி எனது சந்தாவின் வாக்குறுதி எவ்வாறு பூர்த்தியாகும் என்றுதான் கவலையடைகிறார். (அஹ்மதிகள் இவ்வாறிருக்க) பிறருடைய நிலை எவ்வாறு இருக்கும் என்பது பற்றி அல்லாஹ் சூரா ஹதீத் -ன் அடுத்த வசனத்திலேயே இவ்வாறு கூறுகிறான். மேலும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதில் ஒருபோதும் சோம்பேறித்தனம் காட்டக் கூடாது என்று மூஃமின்களுக்கு அல்லாஹ் அதில் எச்சரிக்கவும் செய்கின்றான். அது இறைவணக்கமாக இருந்தாலும் சரி அல்லது பொருள் தியாகமாக இருந்தாலும் சரி அல்லது அல்லாஹ்வின் புறமிருந்து நம்மீது சுமத்தப்பட்ட பிற கடமைகளாக இருந்தாலும் சரிதான். ஏனென்றால் மறுமை வாழ்வு உண்மையான வாழ்வாகும். அல்லாஹ்வின் விருப்பத்தின் வாழ்வாகும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், பொழுதுபோக்கும், அலங்காரமும், உங்களுக்கிடையே பெருமையடித்துக் கொள்வதும், செல்வங்களையும் குழந்தைகளையும் பெருக்கிக் கொள்வதில் போட்டியிடுவதுமேயாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (இவ்வாழ்க்கை) மழையைப் போன்றது. அதனால் உற்பத்தியான தாவர வகைகள் விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்கிறது. பின்னர் அது உலர்ந்து விடுகிறது. பின்னர் அது மஞ்சள் நிறமாவதை நீர் காண்கின்றீர். பின்னர் அது மக்கிப்போன சருகாக ஆகிவிடுகின்றது. (உலகையே நோக்கமாகக் கொண்டவர்களுக்கு) மறுமையில் கடினமான தண்டனையும் (மற்றவர்களுக்கு) அல்லாஹ்விடமிருந்து பாவமன்னிப்பும் இறை திருப்தியும் உள்ளன. இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் பொருள்களடங்கிய தற்காலிக இன்பமேயன்றி வேறில்லை. (57:21)**

எனவே இன்று நாம் இவ்வுலகின் மீது பார்வையை செலுத்தினால், இஸ்லாமிய போதனையின் அடிப்படையில் உண்மையான முறையில் ஜமாஅத் என்ற ரீதியில் செலவு செய்கிறதென்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஆகும் (என்பது புரியும்). அது அல்லாஹ்வின் விருப்பத்திற்காகவே செலவு செய்கிறது. அல்லது தியாகங்கள் செய்கிறது. உலகின் பிற அமைப்புகள் செலவு செய்கின்றதென்றால் அது மிக கொஞ்சமே ஆகும். மேலும் உலக கேளிக்கைக்காகவும் தனது மனஇச்சையை பூர்த்தி செய்வதற்காகவும் தான் செலவிடுகின்றன. பல பித்அத்துகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் முஸ்லிம்களின் மத்தியில் நுழைந்து விட்டது. பெருமைக்காகவும், வெளிக்காட்டுதலுக்காகவும் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் பெருமளவு செலவிடப்படுகிறது.

இது தொடர்பாக நான் ஜமாஅத்திற்கு கவனமூட்ட விரும்புகிறேன். சில நேரம் அஹ்மதிகளின் தரப்பில் அஹ்மதிகள் பற்றி புகார் வருகிறது.

எனவே இக்காலகட்டத்தின் இமாமை ஏற்றுக்கொண்டு நாம் பிறரைப் பார்த்து நமது சுற்றுப்புறத்தை பின்பற்றி நடந்தால், பிறகு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் நோக்கத்தை மறந்து விட்டோம் என்று பொருள். இவ்வாறு நோக்கத்தை மறுப்பவர்களுக்காக அல்லாஹ் கூறுகிறான். இவ்வுலக வாழ்வு வெறும் விளையாட்டும் கேளிக்கையும் ஆகும். மேலும் மன இச்சையை நிறைவேற்றும் இடமாகும். மேலும் இது மனிதப் பிறவியின் உயர் நோக்கத்தையே மறக்கடிக்கும் ஒன்றாகும்.

காலத்தின் இமாமை ஏற்றுக்கொண்ட பின்பும் நம்மில் பொருளாதாரம் மற்றும் சந்ததிகள் பற்றிய பெருமை இருந்தால் மேலும் இறைவணக்கத்தையும், தியாகங்களையும் மறந்து விட்டால், பிறகு அல்லாஹ் கூறுகின்ற கண்ணியமான கூலிக்கு (57:19) வாரிசாக முடியாது. நாம் உங்களுக்கு பொருளை வழங்கிவிட்டோம். ஆனால் இந்த பொருளை வைத்து நீங்கள் உங்கள் பெருமையை பாராட்டாமல், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக செலவிட்டால் நீங்கள் கண்ணியமான வெகுமதியைப் பெறுவீர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். இல்லையென்றால், இந்த பௌதீகப் பொருட்கள்

நிரந்தரமானவையல்ல. இது பசுமையான வயலைப் போன்றதாகும். அது பசுமையில் இருக்கும்போது மனதிற்கு மகிழ்ச்சியூட்டுகிறது. அந்த வயலைப் பார்த்து அதன் சொந்தக்காரர் பல விருப்பங்களை நிறைவேற்ற எண்ணுகிறார். வருங்கால ஆசைகளை பூர்த்தி செய்ய திட்டங்கள் தீட்டுகிறார். ஆனால், அது விளைச்சலை தரும்போது அல்லாஹ்வின் புறமிருந்து புயல்காற்று வீசுகிறது. கடும் மழை பொழிகிறது. அதன் காரணமாக அந்த வயலை, அந்த விளைச்சலை அடித்துக் கொண்டு சென்று விடுகிறது. அதன் சொந்தக்காரருடைய கையில் ஒன்றும் எஞ்சுவதில்லை.

இந்த உதாரணத்தைக் கொண்டு நீங்கள் இவ்வுலக பொருட்களின் பின் செல்லாதீர்கள். ஏனென்றால், இதன் முடிவு மிகவும் கவலையைத் தரக்கூடியதாகவும் இருக்கும் என்று அல்லாஹ் மூஃமினுக்குப் புரிய வைக்கின்றான். மேலும் இறைவனை மறந்து விடுபவர்களுக்கு உரிய தண்டனை மறுமை நாளில் விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, உங்களது பொறுப்பு அல்லாஹ்வின் மன்னிப்பு மற்றும் அவனது விருப்பத்தைப் பெற முயற்சி செய்வதே ஆகும் என்று ஈமான் கொண்டவருக்கு அல்லாஹ் கூறுகின்றான். மேலும் இதுவே உண்மையான மூஃமினுக்கு அடையாளமாகும். இல்லையென்றால் இந்த உலகம் எவ்வளவுதான் அழகாக தெரிந்தாலும், இதனுடைய வசதிகள் இதன் பொருட்கள் எவ்வளவுதான் மனதைக் கவர்ந்தாலும் இதன் முடிவு ஏமாற்றமே ஆகும்; தோல்வியே ஆகும்.

**அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**உங்கள் இறைவனிடமிருந்து மன்னிப்பிற்காகவும் வானம் பூமி ஆகியவற்றின் மதிப்பிற்குச் சமமான சுவர்க்கத்திற்காகவும் நீங்கள் போட்டியிடுங்கள். அது அல்லாஹ்விடத்தும், அவனது தூதர்களிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளதாகும். இது அல்லாஹ்வின் அருளாகும். தான் விரும்புபவருக்கு இதனை அவன் வழங்குகிறான். அல்லாஹ் மாபெரும் அருள் உடையவனாவான். (57:22)**

மூஃமின்கள் எப்போதும் தங்களது இறைவனின் விருப்பத்தையே தேடிக் கொண்டிருப்பார்கள். இதன் விளைவாக இவ்வுலகிலும் அல்லாஹ்வின் அருட்கொடையின் வடிவில் தென்படும் சொர்க்கத்திற்கு வாரிசாகிறார்கள். மேலும் தூய்மையான உள்ளத்தோடு அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காகவே இவ்வுலகில் ஒவ்வொரு வேலையையும் செய்த மூஃமின்களுக்காக மறுமையில் அல்லாஹ் சுவர்க்கத்தை ஆயத்தப்படுத்தியுள்ளான். இவ்வுலகம் மற்றும் மறுமையின் சுவர்க்கத்திற்கு மூஃமின் வாரிசாகின்றார்.

அல்லாஹ்வின் அருள் மழை இவ்வுலகில் இறங்குவதைக் கண்டும் அவர் மகிழ்ச்சி அடைகின்றார். மேலும் மறு உலகிலும் அவர் மகிழ்ச்சி அடைவார். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

பல கடிதங்கள் எனக்கு வருகின்றன. அதில் மக்கள் தங்களது பொருள் தியாகத்தை கூறிவிட்டு, அதை தொடர்ந்து எவ்வாறு அல்லாஹ் இந்த தியாகத்திற்குப் பிறகு உள்ளத்திற்கு நிம்மதியை வழங்கினான் என்றும், எவ்வாறு அல்லாஹ் அவர்களின் பொருளில் அபிவிருத்தியை ஏற்படுத்தினான் என்றும், எவ்வாறு அவர்களின் சந்ததிகளின் மூலம் அவர்களின் கண்களை குளிரச் செய்தான் என்றும் எழுதியுள்ளார்கள்.

இது அனைத்தும் ஒரு மூஃமினுக்கு கிடைக்கின்ற இவ்வுலகின் சொர்க்கமாகும். இதன் காட்சிகளை ஒரு மூஃமின் பார்க்கின்றார். அல்லாஹ்வின் அருளின் காட்சிகளை ஒரு மூஃமின் இவ்வுலகில் காணும்போது மறுவுலக சொர்க்கத்தின் மீது நம்பிக்கை பன் மடங்கு உறுதியாகிறது.

ஒரு ஜமாஅத்தின் பொருளாளர் எனக்கு கடிதம் எழுதுகிறார். (அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது) ஒரு சகோதரர் என்னிடம் வந்து ஜனவரி 2 ஆம் தேதி வக்ஃபே ஜதீத் தொடர்பாக ஹுஸூர் அவர்களின் குத்பா வரும்போது கடந்த வருடத்தை விட இவ்வளவு தொகை கூடுதலாக நான் தருகிறேன். எனவே, இவ்வருடத்தின் முதல் ரசீது என்னுடைய ரசீதை எழுதுங்கள் என்று கூறினார்.

இதற்குப் பதிலாக அல்லாஹ்வின் விருப்பம் கிடைக்கிறது என்ற நம்பிக்கைகளின் காரணமாகவே இந்த எழுச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அல்லாஹ் இவ்வுலகில் நமக்கு அருள் தருகிறான் என்றால் மறுமையில் தருகின்ற அருளை நம்மால் எண்ணிக்கூட பார்க்க முடியாது.

மூஃமினுடைய சொர்க்கம் வானம் மற்றும் பூமியின் பரப்பளவைவிட பெரியதாகும். அதாவது இதற்கு எல்லையே இல்லை. மேலும் சொர்க்கம் என்பது என்ன? முந்தைய வசனத்தில் அது அல்லாஹ்வின் விருப்பமாகும் என வந்துள்ளது.

ஒருமுறை ஒரு நபித்தோழர் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சொர்க்கம் வானம் மற்றும் பூமி அளவு பரந்துள்ளது என்றால் பிறகு நரகம் எங்கே உள்ளது? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பகல் இருக்கும்போது இரவு எங்கு இருக்கிறது? என்று கூறினார்கள். அதாவது சொர்க்கம், நரகம் இரண்டு இடங்கள் அல்ல. மாறாக, இரண்டு நிலைகள் ஆகும். அல்லாஹ்வை மறப்பவர்களுக்கு எங்கு நரகம் தென்படுமோ அங்கு நற்செயல்கள் செய்தவர்கள் சொர்க்கத்தைக் காண்பார்கள். அதன் கோணங்கள் மாறும்போது நிலையும் மாறி விடுகிறது. இன்றைய காலத்தில் சில படங்கள் உள்ளன. சிறிய Angle மாறினாலும் அதன் Dimension மாறி விடுகிறது.

எனவே, ஒரு மூஃமின் இறைவனின் விருப்பத்தின் மீது பார்வையை வைத்தவாறு எங்கு சொர்க்கத்திற்கு வாரிசாகிறாரோ அங்கு மூஃமின் அல்லாதவர், உலகத்தின்மீது மட்டும் பார்வையை வைப்பவர் அல்லாஹ்வின் கோபத்தைப் பெற்று தனது முடிவை மோசமாக்கிக் கொள்கிறார்.

எனவே சொர்க்கம் உண்மையில் அல்லாஹ்வின் விருப்பமே ஆகும். அல்லாஹ்வின் விருப்பம் கிடைத்து விட்டால் அதுவே ஒரு மூஃமினுக்கு சொர்க்கமாகும். அல்லாஹ் நம்மை எப்போதும் இதனைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுபவர்களாக ஆக்குவானாக. நமது இறைவணக்கங்கள் நமது தியாகங்கள் இறை விருப்பத்தைப் பெறுவதற்க காரணமாக அமைய வேண்டும்.

அல்லாஹ் **ஸாலிக ஃபழ்லுல்லாஹி யுஃதீஹி மய்யஷா** என்று கூறி நமது உள்ளத்தை இதன் பக்கம் ஈர்த்துள்ளான். அதாவது அல்லாஹ் எவர் மீது தனது அருளை குறிப்பாக இறக்குவானோ அவர்களுக்கு தான் சொர்க்கமாகும். மேலும் அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் மீது நம்பிக்கை கொள்பவர்கள் ஆவர். மேலும் இக்காலகட்டத்தில் அல்லாஹ்வின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றினார்கள். ஆனால் இந்த அருளை நிரந்தரமாக்கிக் கொள்வதற்கு நாம் நமது செயல்களையும் கவனிக்க வேண்டும். எனவே ஓர் இடத்தில் இவ்வாறு துஆ கற்றுக் கொடுத்துள்ளான். ஈமானை உறுதிப்படுத்துவதற்காக, செயல்களை சரி செய்வதற்காக இவ்வாறு துஆ செய்து கொண்டிருங்கள்.

**ரப்பனா லா துஸிக் குலூபனா பஃத இத் ஹதைத்தான வ ஹப்லனா மி(ன்)லதுன்க ரஹ்மத்தன் இன்னக்க அன்த்தல் வஹ்ஹாப் - எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டிய பின்னர் எங்கள் உள்ளங்களை கோணாலாக்கா திருப்பாயாக! மேலும் எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக! நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய்.** (3:9)

ஈமான் மற்றும் நேர்வழி கிடைத்த பிறகு அல்லாஹ்வே எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. நாம் பெரும் தியாகங்கள் செய்பவர்கள் ஆவோம் என்ற எண்ணம் எங்களுக்கு வந்துவிடக் கூடாது. உலகின் பிரகாசமும், பொலிவும் எங்களை நேர்வழியிலிருந்து விலக்குவதாக அமையக் கூடாது. ஜமாஅத்தில் பலவகையான சந்தாக்கள் உள்ளன. இது எங்கள் மீது ஒரு சுமையாகும் என்ற எண்ணம் ஒருபோதும் எங்களுக்கு வந்துவிடக் கூடாது. இக்காலகட்டத்தில் நம்மை அல்லாஹ் முந்தையவர்களோடு இணைத்தவாறு நமது மார்க்கத்திற்காக தியாகம் செய்யும் நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். நம்மீது இருக்கின்ற மாபெரும் அருட்கொடையை எங்கள் வருங்கால தலைமுறையிலும் அல்லாஹ் நிலைத்திருக்கச் செய்வானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

சந்தா கொடுப்பதால் ஈமானில் முன்னேற்றம் ஏற்படுகிறது. மேலும் இது நேசம் மற்றும் தூய்மையின் பணியாகும். எனவே பைஅத் செய்கின்ற ஆயிரக் கணக்கானவர்களிடம் நீங்கள் உள்ளத்திற்காக சில பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறப்படுவது மிக அவசியமாகும். மேலும் இதில் கவனக்குறைவு வேண்டாம்.

இன்றைய காலகட்டத்தில் ஜமாஅத் அமைப்போடு மிகவும் நெருக்கமான தொடர்பு உடைய அஹ்மதிகள் தியாகத்தின் மிகச் சிறந்த உதாரணங்களை நிலைநாட்டியுள்ளார்கள். சிலரைப் பார்க்கும்போது மிகவும் ஆச்சரியம் எழுகிறது. ஆனால் உலகில் பெரும்பாலான இடங்களில் புதிய அஹ்மதிகள் முறையாக பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் செலுத்தவில்லை. அவர்களை இதில் இணைக்கவில்லை. முயற்சி செய்யப்பட வேண்டிய அளவு செய்யப்படவில்லை. இதுவும் ஜமாஅத் அமைப்பின் பலவீனம் என்றுதான் நான் கருதுகிறேன். ஜமாஅத் அமைப்பு அவர்களிடம் சின்னச்சின்ன தொகையையும் வசூல் செய்து இதற்கான பழக்கத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். முயற்சி செய்யப்பட்ட இடங்களில் அல்லாஹ்வின் அருளால் மிக நல்ல விளைவு ஏற்பட்டுள்ளது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று சந்தா கொடுப்பதால் ஈமான் வளர்கிறது. அல்லாஹ் புதிய அஹ்மதிகள் செய்த முந்தைய நன்மைக்காகவே அவர்கள் மீது அருளை வழங்கியுள்ளான். அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் குரலுக்கு லெப்பைக் என்று கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டனர். இப்போது இந்த அருட்கொடையை தமது வாழ்வின் நிரந்தர அங்கமாக்கிக் கொண்டவாறு ஈமானில் முன்னேற்றமடைவதற்கு இறைவணக்கத்துடன், தியாகம் செய்வதும் மிகவும் அவசியமானதாகும். இவ்வாறு குழந்தைகள் மத்தியிலும் ஆர்வத்தை வழங்கியவாறு ஏதாவது ஒரு சந்தாவில் அவசியம் இணைக்க வேண்டும்.

இதற்காக நான் கடந்த வருடம் வக்ஃபே ஜதீதில் குழந்தைகளை அதிகமாக இணையுங்கள் என்று கூறினேன். அல்லாஹ் ஜமாஅத்துகளுக்கும், பெற்றோர்களுக்கும் இதன்படி செயலாற்றுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

பல இடையூறுகளுக்கும் மத்தியில் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் காலடி முன்னேற்றத்தின் பாதையில் உள்ளது. ஒரு ஜமாஅத் சோம்பேறித்தனம் காட்டினால் மற்றொரு ஜமாஅத் அதன் குறையை நிவர்த்தி செய்கிறது. ஆனால் ஜமாஅத்துகள் இன்னும் முயற்சி செய்தால் நல்லது. என் முன்வருகின்ற கணக்கைப் பார்க்கும் போது இதில் இன்னும் வளர்ச்சி அடைய இடம் உள்ளது. அதிகமாக மக்களை இதில் இணைக்க முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் சில சொற்பத் தொகையைச் சந்தாவாக வழங்கினாலும் சரி. ஏனென்றால் இதன் மூலம் நாம் ஈமானில் வளர்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்தை பெறுகிறோம்.

இப்போது நான் வக்ஃபே ஜதீத் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். கடந்த வருடம் 51வது வருடமாக இருந்தது. இப்போது 52வது வருடம் தொடங்கி விட்டது. இதில் உலகின் அனைத்து ஜமாஅத்துகளும் அல்லாஹ்வின் அருளால் ஒட்டுமொத்தமாக 31,75,000 பவுண்ட் தியாகம் செய்துள்ளது. கடந்த வருடத்தின் வசூலை விட 7,50,000 பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ்! வழக்கம்போல் உலகின் ஜமாஅத்துகளில் பாகிஸ்தான் அல்லாஹ்வின் அருளால் முதலிடத்தில் உள்ளது. வக்ஃபே ஜதீதின் சந்தா கொடுப்பவர்களில் பாகிஸ்தான் இவ்வருடம் 10 ஆயிரம் புதிய நபர்களை இந்த சந்தாவில் இணைத்துள்ளது. பாகிஸ்தானின் பெரும்பான்மை மக்கள் மிகவும் ஏழைகள் ஆவர்.

ஒரு ஹதீஸில் வருவதுபோன்று உதாரணம் இவர்கள் மீது பொருந்துகிறது. அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு திர்ஹம் ஒரு இலட்சம் திர்ஹமை விட அதிகரித்து விட்டது. இது எவ்வாறென்று கேட்டதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு மனிதரிடம் இரண்டு திர்ஹம் இருந்தன. அவர் அந்த ஒரு திர்ஹமையும் சந்தாவாக கொடுத்து விட்டார். மற்றொருவரிடம் இலட்சக்கணக்கான திர்ஹம்கள் இருந்தன. அவர் அதிலிருந்து ஒரு இலட்சம் திர்ஹம்களை சந்தாவாக கொடுத்தார். இரண்டாமர் அதிக தொகை கொடுத்தபோதிலும் தியாகம் என்ற அடிப்படையில் ஒரு திர்ஹம் ஒரு இலட்சத்திற்கு சமமானது என்று கூறினார்கள்.

இவ்வாறே பாகிஸ்தானில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகள் ஆவர். ஆப்பிரிக்காவில் சில நாடுகள் உள்ளன. பெரும்பான்மையான மக்களிடம் மிகச் சொற்பமான தொகையே இருக்கும். அதிலிருந்து அவர்கள் சந்தாவிற்காக தியாகம் செய்கிறார்கள். இவர்கள் எவ்வாறு சந்தாவும் கொடுத்து தமது காலத்தையும் கழிக்கிறார்கள் என்று எண்ணும்போது மிகவும் வியப்பு ஏற்படுகிறது. அல்லாஹ் இவர்களுக்கு மிகச்சிறந்த நற்கூலி வழங்குவானாக.

அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. இவர்கள் 256 புதிய நபர்களை இந்த சந்தாவில் இணைத்துள்ளார்கள். ஆனால் கடந்த ஆண்டை விட ஏறக்குறைய 80,000 குறைந்துள்ளது. மொத்த சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை 8,276 பேர்.

அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகளின் சந்தா இந்தியா மற்றும் ஆப்பிரிக்க ஏழை நாடுகளில் பள்ளிவாசல்கள், ஜமாஅத் ஏடுகள் வெளியிடுவது போன்ற இன்னும் பல ஜமாஅத் பணிகளுக்காக செலவிடப்படுகிறது. எனவே இந்த நாடுகள் தொகையை அதிகரிக்கவும், சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும்.

நான் நாஸிராத் மற்றும் அத்ஃபாலையும் இந்த சந்தாவில் இணைக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். இது குழந்தைகளிடம் தியாக மனப்பான்மையை வளர்க்க உதவும்.

மூன்றாவது இடத்தில் அல்லாஹ்வின் அருளால் இங்கிலாந்து உள்ளது. இவ்வருடம் 86,000 பவுண்டு அதிக வசூலாகியுள்ளது. அல்லாஹ்வின் அருளால் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையும் 1,382 பேர் அதிகரித்துள்ளனர். மொத்த எண்ணிக்கை 14,519 பேர் ஆகும். இங்கிலாந்து ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் மிக வேகமாக முன்னேறி வருகின்ற ஜமாஅத்தாக உள்ளது.

கனடா எப்போதும் ஐந்தாவது இடத்தில் இருக்கும். இப்போது 4வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. 1,80,000 டாலர் அதிக வசூல் செய்துள்ளது. 378 பேர் புதிதாக இங்கு இணைந்துள்ளனர். 13,325 பேர் மொத்த சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையாகும்.

ஜெர்மனி 4வது இடத்திலிருந்து 5வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. 32,000 யூரோ அதிகமாக வசூல் ஆகியுள்ளது. ஆனால் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையில் 1,387 பேர் குறைந்துள்ளனர். இந்த நாட்டின் ஜமாஅத் பொருளாதார அமைப்பின் அடிப்படையில் ஜெர்மனியிலிருந்து பெருமளவு மக்கள் இங்கு (இலண்டன்) வந்து விட்டதால் இவ்வாறு நிகழ்ந்துள்ளது என கூறுகிறார்கள். ஆனால் இன்னும் முயற்சியில் சில குறைபாடு இருக்கிறது என்பது எனது கருத்தாகும்.

ஆறாவது இடத்தில் இந்திய ஜமாஅத்துகள் உள்ளன. இவர்களின் வசூல் இவர்களின் கருத்தின்படி 17 இலட்சம் ரூபாய் கடந்த ஆண்டைவிட அதிகமாகும். மேலும் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை 1,16,120 பேர் ஆவர். இந்தியாவிற்கு நான் கூறுகிறேன். நீங்கள் உங்கள் சொந்தக் காலில் நிற்க முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் உலகின் நிலை மாறி வருகிறது. எனவே இதை முன்னிட்டு இப்போது ஒவ்வொரு ஜமாஅத்தும் தத்தமது தேவையை தாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதுவரை ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் உதவிகள் செய்தன. ஆனால் வரும் காலங்களில் இந்த உதவிகள் கிடைக்காமல் போகலாம்.

இவ்வாறே ஆப்பிரிக்க நாடுகளும் தங்கள் தேவைகளை நீங்களே பூர்த்தி செய்யுங்கள். இந்தோனேஷியா 7வது இடத்தில் உள்ளது. 32,000 பவுண்ட் அதிக வசூலாகியுள்ளது. 829 பேர் புதிதாக இணைந்துள்ளார்கள். இவ்வாறே பெல்ஜியம், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து இவை முறையே 8, 9, 10 வது இடத்தில் உள்ளது.

உலகத்தில் சந்தா தொகையை அதிகமாக கொடுப்பவர்களின் தர வரிசையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 38,092 பவுண்ட் இவர்களின் சந்தாவாகும்.

பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, பெல்ஜியம் இவை முறையே அடுத்தடுத்த நிலையில் உள்ளன.

ஆப்பிரிக்க நாடுகளில் நைஜீரியா தஹ்ரீகே ஜதீதிலும் கடந்த ஆண்டு முதலிடம் வகித்தது. அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதிலும் முதலிடம் வகித்துள்ளது....

வக்ஃபே ஜதீதின் பொருளாதார அமைப்பில் இவ்வாண்டு சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை அல்லாஹ்வின் அருளால் 5,37,000 பேர் ஆகும். இவ்வாண்டு மொத்தம் 27000 பேர் புதிதாக இதில் இணைந்துள்ளனர். சில நாடுகளில் அறிக்கை முழுமையாக இல்லை. எனவே, இந்த எண்ணிக்கையை இறுதி என்று நாம் கூற முடியாது.

குழந்தைகளை இந்த அமைப்பில் அதிகமாக இணையுங்கள். குழந்தைகள் 50 பைசா கொடுத்தாலும் அதை வரவேற்க வேண்டும். அவர்களுக்கு இந்த பழக்கத்தை கொண்டு வர வேண்டும். மேலும் புதிய அஹ்மதிகளிடம் இந்த பழக்கத்தை உருவாக்க முயற்சி செய்யுங்கள். அவர்களையும் வக்ஃபே ஜதீதில் சேருங்கள்.

(வசூலின் அடிப்படையில் இங்கிலாந்திலுள்ள முதல் 10 பத்து ஜமாஅத்துகளின் தர வரிசை மற்றும் அமெரிக்காவின் முதல் 5 ஜமாஅத்துகளின் தர வரிசையை ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள்).

(பாகிஸ்தானில் பெரியவர்களின் சந்தா தர வரிசையில் முதல் 3 ஜமாஅத்துகளின் தர வரிசை மற்றும் குழந்தைகளின் சந்தா தர வரிசையில் முதல் 3 ஜமாஅத்துகளின் தர வரிசையையும் ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.)

இது தவிர மிகவும் நல்ல முறையில் தியாகம் செய்து Position வராத பிற ஜமாஅத்துகளும் பாகிஸ்தானில் உள்ளன.

(ஜெர்மனியின் முதல் 5 ஜமாஅத்துகளின் தர வரிசை மற்றும் கெனடாவின் ஜமாஅத்தின் தர வரிசையையும் ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.)

அல்லாஹ் அனைத்து பொருள் தியாகம் செய்தவர்களின் பொருளிலும், சந்ததியிலும் அபிவிருத்தியை வழங்குவானாக. மேலும் ஜமாஅத்தின் வளர்ச்சியின் அடிப்படையிலும் அல்லாஹ் இந்த பொருளில் எல்லையில்லா பரக்கத்தை வழங்குவானாக. ஒவ்வொரு பொழுதும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவது மட்டுமே ஒவ்வொரு அஹ்மதியின் நோக்கமாக இருக்க வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் துஆ செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 09.01.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**